**அக்டோபர் – 15**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவப் பட்டதாரி சக்தி ஜெய சுந்தர் இராஜசேகர், 10வது BRICS இளம் அறிவியலாளர்கள் மன்றத்தின் போது பிரேசிலில் நடைபெற்ற BRICS இளம் கண்டுபிடிப்பாளர் பரிசு வழங்கீட்டு விழாவில் இரண்டாம் பரிசினை வென்றார்.
- இந்திய கடலோரக் காவல்படையின் (ICG) கர்நாடகப் பிரிவானது, பெருங்கடல் பரப்பில் பெருமளவிலான மீட்பு நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு மற்றும் தயார் நிலையைச் சோதிப்பதற்காக, மங்களூருவின் பனம்பூர் கடற்கரையில் பிராந்தியத் தேடல் மற்றும் மீட்புப் பயிற்சியை (ReSAREX-25) நடத்தியது.
- வளர்ந்து வரும் நாடுகளில் பள்ளி உணவுத் திட்டங்களை ஆதரிப்பதற்காக 2009 ஆம் ஆண்டு மேரிஸ் மீல்ஸ் என்ற தொண்டு நிறுவனத்தினால் தொடங்கப்பட்ட உலக கஞ்சி தினமானது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 10 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- முட்டைகளின் ஊட்டச்சத்து நன்மைகள் மற்றும் உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தில் அவற்றின் பங்கை எடுத்துக்காட்டும் வகையில், 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதியன்று உலக முட்டை தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## திருமலாபுரம் அகழ்வாராய்ச்சிகள்

- தென்காசி மாவட்டத்தில் உள்ள திருமலாபுரத்தில் தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது (TNSDA) முதல் அகழ்வாராய்ச்சியை நடத்தியது.
- இந்த இடமானது தற்போதைய திருமலாபுரம் கிராமத்திலிருந்து வடமேற்கே சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- குலசேகரப் பேரேரி குளத்திற்கு அருகிலுள்ள இரண்டு பருவகால ஓடைகளுக்கு இடையில் கிட்டத்தட்ட 35 ஏக்கர் பரப்பில் இந்த புதைவிடப் பகுதி அமைந்துள்ளது.
- தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அருகில் இரும்புக் கால கலாச்சாரம் இருந்ததை இந்த அகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்தின.
- இந்தத் தளமானது தற்காலிகமாக கி.மு. மூன்றாம் மில்லினியத்தின் முற்பகுதியில் இருந்து நடுப்பகுதி வரையிலானதாக தேதியிடப்பட்டுள்ளது.
- ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகலை போன்ற பிற இரும்புக் காலத் தளங்களுடன் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- முதல் அகழ்வாராய்ச்சித் தொடரில் மொத்தம் 37 அகழிகள் தோண்டப்பட்டன.
- முதுமக்கள் தாழிகளுடன் கூடிய தனித்துவமான செவ்வக வடிவ கல் பலகை அறை ஒன்று கண்டெடுக்கப்பட்டது.
- 35 கல் பலகைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த அறையானது 1.5 மீட்டர் வரை கூழாங்கற்களால் நிரப்பப்பட்டது.
- கருப்பு மற்றும் சிவப்பு நிறப் பாண்டங்கள், சிவப்பு நிறப் பாண்டங்கள், சிவப்பு நிறப் பூச்சு பூசப்பட்ட பாண்டங்கள் மற்றும் கருப்பு நிறப் பூச்சு பூசப்பட்ட பாண்டங்கள் உட்பட பல்வேறு பீங்கான் வகைகள் கண்டெடுக்கப்பட்டன.
- சில பீங்கான் வகைகளில் டி. கல்லுப்பட்டி மற்றும் ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் காணப்பட்டதைப் போன்ற வெள்ளை வண்ணம் தீட்டப்பட்ட வடிவமைப்புகள்

இருந்தன.

- ❖ தாழிகளில் உள்ள சின்னங்களில் மனிதன், மலை, மான் மற்றும் ஆமையின் உருவங்கள் இருந்தன.
- ❖ எலும்பு, தங்கம், வெண்கலம் மற்றும் இரும்பினால் செய்யப்பட்ட மொத்தம் 78 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.
- ❖ இடுக்கி முள், வாள், ஈட்டி முனை, தங்க மோதிரம், கோடரி, கத்தி, உளி, எலும்பினால் ஆன ஈட்டி முனை மற்றும் அம்பு ஆகியவை இங்கு கண்டெடுக்கப்பட்ட கலைப் பொருட்களில் அடங்கும்.
- ❖ 0.49 மீட்டர் ஆழத்தில் ஒரு தாழிக்குள் மூன்று சிறிய தங்க மோதிரங்கள் கண்டெடுக்கப் பட்டன.
- ❖ ஒவ்வொரு தங்க மோதிரமும் 4.8 மில்லிமீட்டர் விட்டம் கொண்டதாகவும், ஒரு மில்லி கிராமிற்கும் குறைவான எடையுள்ளதாகவும் இருந்தது.
- ❖ ஆதிச்சநல்லூரின் இரும்புக் காலக் கலாச்சாரப் பண்புகளைப் போன்றே ஆரம்ப கட்டக் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகின்றன.




## தமிழ்நாடு அரசின் Q3 FY26 கடன் குறித்த அறிக்கை

- ❖ 2025–26 ஆம் நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் 39,000 கோடி ரூபாய் கடன் வாங்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ கடன் வாங்குவது என்பது மாநிலங்களுக்கான இந்திய ரிசர்வ் வங்கியின் திட்டமிடப் பட்ட சந்தை கடன் பட்டியலின் ஒரு பகுதியாகும்.
- ❖ திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 55,844.53 கோடி ரூபாயாக உள்ளதுடன், 2025–26 ஆம் ஆண்டில் மொத்தம் 1,62,096.76 கோடி ரூபாய் கடன் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி நிலுவையில் உள்ள கடன் தொகை 9,29,959.3 கோடி ரூபாயாகும்.
- ❖ பதினைந்தாவது நிதி ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 28.70% வரம்பிற்குள், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்திக்கான கடன் விகிதம் 26.07% என மதிப்பிடப் பட்டு உள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 74,942.53

கோடி ரூபாயாக இருந்தது, இது மொத்த வருவாயில் 75.3% ஆகும்.

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத்தில் 25,686.65 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறையும், 37,082.06 கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறையும் பதிவானது.




## தமிழ்நாடு - கட்டிட விதிகள்

- தமிழ்நாடு பசுமை மற்றும் வெள்ளை வகை (மாசுபாடு குறியீடு குறைவாக உள்ளவை) தொழில் துறைகளுக்கான விதிமுறைகளை எளிதாக்குவதற்காக தமிழ்நாடு அரசானது 2019 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகளை திருத்தியமைத்தது.
- நகர்ப்புற கிராமப் பஞ்சாயத்து மற்றும் கிராமப் பஞ்சாயத்து பகுதிகளில் தேவைப் படும் குறைந்தபட்ச சாலை அகலம் 7 மீட்டரிலிருந்து 6 மீட்டராகக் குறைக்கப் பட்டு உள்ளது.
- இந்தத் தளர்வு ஆனது இந்த கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பசுமை மற்றும் வெள்ளை வகை தொழில் துறைகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், அனைத்துத் தொழில்துறை வகைகளுக்கும் குறைந்தபட்ச சாலை அகலம் 7 மீட்டராகவே உள்ளது.
- ஆரஞ்சு மற்றும் சிவப்பு வகை தொழில் துறைகளுக்கு இன்னும் அனைத்து பகுதிகளிலும் குறைந்தபட்சம் 7 மீட்டர் சாலை அகலம் தேவைப்படுகிறது.
- வெள்ளை, பசுமை, ஆரஞ்சு மற்றும் சிவப்பு என அனைத்து தொழில்துறை வகைகளுக்கும் தரை பரப்புக் குறியீடு (FSI) இரண்டாகவே உள்ளது.

- தமிழ்நாடு அரசானது முன்னதாக ஒழுங்குமுறை விதிகளை எளிமைப்படுத்தலின் ஒரு பகுதியாக 609 தொழில் துறைகளை வெள்ளைப் பிரிவின் கீழ் வகைப்படுத்தியிருந்தது.




# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி தன்-தான்யா கிருஷி யோஜனா




- இந்தத் திட்டமானது ஆறு ஆண்டுகளுக்கு 24,000 கோடி ரூபாய் என்ற வருடாந்திர நிதி ஒதுக்கீட்டுடன் 100 குறைந்த செயல்திறன் கொண்ட வேளாண் மாவட்டங்களை இலக்காகக் கொண்டுள்ளது.
- அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், பயிர்களின் பல்வகைப்படுத்தலை ஊக்குவித்தல், நீர்ப்பாசனம் மற்றும் சேமிப்பை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கான கடன் அணுகலை அதிகரித்தல் ஆகியவை இதன் நோக்கமாகும்.

- இந்தத் திட்டமானது 11 அமைச்சகங்களிலிருந்து தற்போதுள்ள 36 திட்டங்களை ஒன்றிணைப்பதை உறுதி செய்கிறது இதன் மூலம் 1.7 கோடி விவசாயிகள் நேரடியாக பயனடைவார்கள்.
- இந்தத் திட்டமானது வேளாண் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளான பழங்கள், மீன் வளம், தேனீ வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் வேளாண் காடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இது ஆறு ஆண்டுகளில் 1,44,000 கோடி ரூபாய் முதலீட்டில் வேளாண் வருமானத்தை அதிகரிக்கும், மீள்தன்மை கொண்ட கிராமப்புற வாழ்வாதாரங்களை உருவாக்கும் மற்றும் தன்னிறைவினை ஊக்குவிக்கும்.

## SPARK 4.0

- மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி சபை (CCRAS) ஆனது, 2025–26 ஆம் ஆண்டிற்கான SPARK 4.0 (ஆயுர்வேத ஆராய்ச்சி கென் மாணவர் திட்டம்) திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- இந்தத் திட்டமானது, இந்தியா முழுவதும் இளங்கலை ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை (BAMS) பயிலும் மாணவர்களை இலக்காகக் கொண்டுள்ளது.
- SPARK 4.0 ஆனது, இரண்டு மாதங்களுக்கு மாதத்திற்கு 25,000 ரூபாயாக 300 மாணவர்களுக்கு தலா 50,000 ரூபாய் வழங்கும்.
- இந்தத் திட்டமானது, ஆசிரியர் வழிகாட்டுதல் மற்றும் நேரடி அறிவியல் பயிற்சியுடன் குறுகிய கால சுயாதீன ஆராய்ச்சித் திட்டங்களை ஊக்குவிக்கிறது.





## பாரத் வாடகை வாகன சேவை முன்னெடுப்பு

- தேசிய இணைய ஆளுகைப் பிரிவானது (NeGD) 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்படும் சஹாகர் டாக்ஸி கூட்டுறவு லிமிடெட் நிறுவனத்தின் பாரத் வாடகை வாகன சேவை முன்னெடுப்பிற்கான தொழில்நுட்ப ஆதரவினை வழங்க உள்ளது.
- பாரத் வாடகை வாகன சேவை என்பது அதன் முதல் வகையான கூட்டுறவு சார்ந்த, குடிமக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் தேசிய பயண சேவையாகும்.

- இந்த கூட்டாண்மையில் பாதுகாப்பான, தடையற்ற டிஜிட்டல் அணுகலுக்காக DigiLocker, UMANG மற்றும் API Setu உடன் தள ஒருங்கிணைப்பும் அடங்கும்.
- பன்மொழி மற்றும் அணுகக்கூடிய வடிவமைப்புடன் உள்ளடக்கிய, தொழில்நுட்பம் சார்ந்த பொதுச் சேவைகளை வழங்கும் டிஜிட்டல் இந்தியாவின் தொலைநோக்கு கொள்கையுடன் இந்த சேவை ஒன்றியமைகிறது.




## வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கான செயல் திட்டம்




- நிதி ஆயோக் அமைப்பானது, "செயற்கை நுண்ணறிவுப் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கான செயல் திட்டம்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- இந்த அறிக்கையானது, 5 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் 4 மில்லியன் புதிய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூலமாக இயக்கப்படும் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்று குறிப்பிடுகிறது.
- இந்தியாவை உலகளாவிய செயற்கை நுண்ணறிவு தொழிலாளர் வள மையமாக மாற்றுவதற்காக தேசிய செயற்கை நுண்ணறிவுத் திறமை திட்டம் தொடங்கப்பட உள்ளது.
- இந்தச் செயல் திட்டமானது AI எழுத்தறிவு, பெரிய அளவிலான மறுதிறன் பயிற்சி மற்றும் உலகளாவிய AI திறமைகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இது AI உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம், தொழில் துறை மற்றும் கல்வித் துறை இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-ஐக்கியப் பேரரசு இடையிலான இணைப்பு மற்றும் புத்தாக்க மையம்





- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை இணைந்து நான்கு ஆண்டுகளில் 282 கோடி ரூபாய் முதலீட்டில் இந்தியா- ஐக்கியப் பேரரசு இணைப்பு மற்றும் புத்தாக்க மையத்தினை (CIC) தொடங்கியுள்ளன.
- CIC என்பது 6G, AI மற்றும் பாதுகாப்பான தகவல் தொடர்புகள் உள்ளிட்ட அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான தொலை தொடர்பு தொழில்நுட்பங்களை மையமாகக் கொண்ட ஓர் இருதரப்பு ஆராய்ச்சித் தளமாகும்.
- இந்தியா- ஐக்கியப் பேரரசு 2035 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டத்துடன் ஒருங்கிணைந்த பாதுகாப்பான, உள்ளடக்கிய மற்றும் மீள்திறன் கொண்ட டிஜிட்டல் தகவல்தொடர்புகளை மேம்படுத்துவதை இந்த மையம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வலையமைப்புப் பயனுறு திறன் வடிவமைத்தலுக்கான செயற்கை நுண்ணறிவு, கிராமப்புற இணைப்புக்கான நிலப்பரப்பு சாராத வலையமைப்புகள் மற்றும் தொலைத்தொடர்பு இணையவெளிப் பாதுகாப்பு ஆகியவை முக்கிய கவனம் செலுத்தப் படும் பகுதிகளில் அடங்கும்.

- டிஜிட்டல் இணைப்பு சார்ந்தப் புத்தாக்கங்களில் கல்வி, தொழில்துறை மற்றும் அரசு ஒத்துழைப்புக்கான மையமாக CIC செயல்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தொடர்பில்லா எண் உருவாக்க நுட்பம்

- பெங்களூருவில் உள்ள இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள இந்திய அறிவியலாளர்கள் குவாண்டம் இயல்புகளைப் பயன்படுத்தி முழு தொடர்பில்லா (ரேண்டம்) எண்களை உருவாக்குவதற்கான ஒரு நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- இவற்றைப் படிமுறை தீர்வுகளால் கணிக்கவோ அல்லது நகலெடுக்கவோ முடியாது என்பதால், முழு ரேண்டம் எண்கள் டிஜிட்டல் பாதுகாப்பிற்கு அவசியமானவை.
- தற்போதைய அமைப்புகள் ஆனது படிமுறை தீர்வுகளால் உருவாக்கப்படுகின்ற மற்றும் குவாண்டம் கணினி தாக்குதல்களுக்கு ஆளாகக் கூடிய போலி ரேண்டம் எண்களைப் பயன்படுத்துகின்றன.
- அளவீட்டின் போது ஃபோட்டான் நிலைகள் போன்ற இயல்பாகவே கணிக்க முடியாத துகள் நடத்தைகளிலிருந்து குவாண்டம் ரேண்டம் (தொடர்பில்லா) தன்மை உருவாகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## டெல்லிப் பிரகடனம் 2025

- உலகளாவியப் பருவநிலை இலக்குகளுக்கான உள்ளூர் நடவடிக்கை குறித்த டெல்லி பிரகடனம் ஆனது புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ARISE நகரங்கள் மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு உடன்படிக்கையின் (UNFCCC) 30 வது பங்குதாரர்கள் மாநாட்டிற்கான (COP30) உலகளாவிய தெற்கு நாடுகளிலிருந்து நகர்ப்புற முன்மொழிதல்களை இந்தப் பிரகடனம் அதிகரிக்கிறது.
- இது மதிப்பிடக் கூடிய உள்நாட்டுப் பருவநிலை நடவடிக்கைகள், உள்ளடக்கிய வகையிலான பசுமை மாற்றங்கள் மற்றும் நகரங்களுக்கான மேம்பட்ட பருவநிலை

நிதி அணுகலை ஊக்குவிக்கிறது.

- நகரங்கள் ஆனது முக்கியப் பருவநிலை நடவடிக்கை பங்குதாரர்களாக அங்கீகரிக்கப் பட வேண்டும் என்ற அழைப்பாக, பெலெமில் உள்ள COP30 தலைமைக்கு இந்த ஆவணம் அறிமுகப்படுத்தப் படும்.




## எரிவாயு உமிழ்வின் செறிவு குறித்த விதிகள்





- நான்கு தொழில் துறைகளுக்கான முதல் பசுமை இல்ல வாயு உமிழ்வு செறிவு இலக்கு விதிகள் அறிவிக்கப்பட்டன.

- அரசாங்கமானது, சட்டப்பூர்வ பிணைப்பு சார்ந்த 2025 ஆம் ஆண்டு பசுமை இல்ல வாயு உமிழ்வுச் செறிவு (GEI) இலக்கு விதிகளை அறிவித்தது.
- இந்த விதிகள் ஆனது சிமெண்ட், அலுமினியம், குளோர்-காரம், கூழ் மற்றும் காகிதத் துறைகளில் 282 அதிக உமிழ்வு அலகுகளுக்குப் பொருந்தும்.
- உமிழ்வுச் செறிவு ஆனது ஓர் உற்பத்தி அலகில் எவ்வளவு டன்கள் அளவிலான கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு என்ற அளவில் அளவிடப்படுகிறது.
- இலக்குகளைப் பூர்த்தி செய்யும் தொழில் துறைகள் கார்பன் மதிப்புகளைப் பெறுகின்றன; பூர்த்தி செய்யத் தவறியவை மதிப்புகளை வாங்க வேண்டும் அல்லது இழப்பீடு வழங்க வேண்டும்.
- உமிழ்வைக் குறைப்பதன் மூலம் பாரீஸ் உடன்படிக்கையின் கீழ் இந்தியாவின் பருவநிலை உறுதிப்பாடுகளை ஆதரிப்பதை இந்த விதிகள் நோக்கமாகக் கொண்டு உள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக அஞ்சல் தினம் 2025 - அக்டோபர் 09




- இது 1874 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தின் பெர்னில் உலகளாவிய அஞ்சல் ஒன்றியம் நிறுவப் பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 1969 ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற UPU மாநாட்டினால் இது உலக அஞ்சல் தினமாக அறிவிக்கப்பட்டது.
- அன்றாட வாழ்வில் அஞ்சல் துறையின் பங்கு மற்றும் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் அதன் பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Post for People: Local Service. Global Reach" என்பதாகும்.

## உலக மனநல தினம் 2025 - அக்டோபர் 10

- இத்தினமானது விழிப்புணர்வு மற்றும் ஆதரவை ஊக்குவிப்பதற்காக 1992 ஆம் ஆண்டில் உலக மனநல கூட்டமைப்பால் தொடங்கப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது, சுகாதார அமைப்புகள் மூலம் உலகளாவிய அணுகலை

விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் 1994 ஆம் ஆண்டில் இணைந்தது.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Access to Services – Mental Health in Catastrophes and Emergencies" என்பதாகும்.




## தேசிய அஞ்சல் தினம் 2025 - அக்டோபர் 10




❖ அக்டோபர் 09 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்ட உலக அஞ்சல் தினத்தின் நீட்டிப்பாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.

❖ பிரிட்டிஷ் ஆட்சியின் போது டல்ஹௌசி பிரபுவால் 1854 ஆம் ஆண்டில் இந்தியாவின் அஞ்சல் அமைப்பு நிறுவப்பட்டது.


❖ தற்போது தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள இத்துறை உலகின் மிகவும் பரவலாக விநியோகிக்கப்படும் அஞ்சல் வலையமைப்பாகும்.

❖ இந்திய அஞ்சல் சேவையானது அஞ்சல் விநியோகம், பண அஞ்சல்கள், சேமிப்புத் திட்டங்கள், ஆயுள் காப்பீடு, ஓய்வூதிய விநியோகம் மற்றும் MGNREGA ஊதிய

விநியோகத்தை வழங்குகிறது.

- இந்தியாவில் 23 அஞ்சல் வட்டங்கள் மற்றும் இராணுவ அஞ்சல் சேவை உட்பட 9 மண்டலங்கள் உள்ளன.
- 6 இலக்க அஞ்சல் குறியீட்டு எண் (PIN) குறியீடு முறையானது 1972 ஆம் ஆண்டில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் 2025 - அக்டோபர் 10




- இத்தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் மரண தண்டனைக்கு எதிரான உலக கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் நிலைமைகள் குறித்த விழிப்பு உணர்வை ஊக்குவிப்பதோடு மரண தண்டனையை ஒழிப்பதற்கான வாதத்தினையும் முன் வைக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "The death penalty protects no one" என்பதாகும்.
- 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதியன்று, ஐரோப்பிய சபையும் அக்டோபர் 10 ஆம் தேதியை மரண தண்டனைக்கு எதிரான ஐரோப்பிய தினமாக அறிவித்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★